# குருணாகல் மாநகர சபை

# குருணாகல் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 29 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 செப்தெம்பர் 12 ஆந் திகதி சபையின் நகராதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் குருணாகல் மாநகர சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக உரிய கணக்கு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள எனது அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான குருணாகல் மாநகர சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளில் காணி மற்றும் கூட்டங்களின் பெறுமதி தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட இருப்பு, நீர், மின்சாரம், பிரிவுகள் போன்றவையாக தனியாக இனங்காணப்படாமல் பேரேட்டில் காணப்பட்ட ரூபா 31,623,325 பெறுமதியானது ஒரு மீதியாக கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் இருப்பு

மீள மதிப்பிடப்படாதிருந்ததுடன் பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் இறுதி மீதியான ரூபா 31,623,325 தொகையின் அளவே கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டில் வேலைகளுக்காக ஜாதிக சவிய, கமநெகும மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட நிதிகளின் கீழ் ரூபா 2,276,827 கிடைத்து உரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்த மூலதனப் பெறுவனவுகள் மற்றும் மூலதனச் செலவினங்கள் மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதிவரையில் வாடிவீட்டுக் கட்டணமாக ரூபா 1,639,905 தொகை நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து அறவிடக் கூடியதாகக் காணப்பட்ட போதிலும் அது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு சபையினால் செலுத்த வேண்டிய ஓய்வூதியப் பங்களிப்புப் பணமான ரூபா 50,432,107 தொகை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

**கணக்காய்விற்காக தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 188,033,634 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்தீகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 57,621,426 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 55,573,017 ஆக இருந்தது.

## 2.2 நிதிக்கட்டுப்பாடுகள்

பின்வரும் நிதிக்கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2005 தொடக்கம் மீளாய்வாண்டு வரை பொறியியல் பிரிவு பெற்றிருந்த ரூபா 1,414,048 தொகையான முற்பணம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 03 வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதும் தேறாதிருந்த ரூபா 234,139 பெறுமதியான காசோலைகளும், வங்கிக் கணக்குகளில் இனங்காணப்படாத வரவு ரூபா 32,338 தொகையும் 3 வங்கிக் கணக்குகளில் இனங்காணப்படாத செலவு ரூபா 417,592 தொகையும் காணப்பட்டன. அவ்வாறே 03 வங்கிக் கணக்குகளில் காணப்பட்ட 15 மதிப்பிழந்த காசோலைகளுக்குரிய ரூபா 681,292 தொகை தொடர்பாகவும் நிதிப்பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் நானாவித வைப்பு மீதியான ரூபா 24,972,348 தொகையில் பல வருட காலத்திலிருந்து கொண்டுவரப்படுகின்ற இனங்காணப்பட்டு தீர்க்கப்படாதிருந்த 07 சந்தர்ப்பங்களில் ரூபா 10,227,547 அளவில் காணப்பட்டன.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

நகராதிபதியினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 34,932 | 32,456 | 18,949 |
| (ii) | நீர் விற்பனை | 31,625 | 74,250 | 38,843 |
| (iii) | வாடகை | 49,083 | 47,640 | 2,205 |
| (iv) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 5,812 | 5,747 | 56 |
| (v) | ஏனைய வருமானம் | 231,228 | 173,023 | 23,975 |

**2.3.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 363,567 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 12,523,467 |

**2.3.3 ஆதன வரி**

மீளாய்வாண்டிற்குரிய ஆதனவரியாக ரூபா 33 மில்லியன் மாத்திரம் பற்றுச்சீட்டிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை ஆதனவரி மீதி ரூபா 18,949,371 ஆக இருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அரசாங்க சொத்துக்களின் கீழ் மீளாய்வாண்டில் 47 நிறுவனங்களுக்காக ரூபா 1,247,457 தொகை ஆதனவரி பற்றுச்சீட்டிடப்பட்டிருந்துதுடன் அதில் 14 நிறுவனங்கள் 02 தொடக்கம் 08 வருடங்களுக்கிடையிலான காலமாக முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 2,828,408 தொகையான நிலுவை ஆதனவரி மீதி மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் காணப்பட்டது.

(ஆ) 5 வட்டாரங்களில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் பற்றுச்சீட்டிப்பட்ட 473 சொத்துக்களுக்காக 10 வருடங்களுக்கு மேற்பட்ட கால இடைவெளிக்குரிய ரூபா 1,214,444 நிலுவையும், 5 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான காலப்குதிகளுக்குரிய 262 சொத்துக்களுக்கான ரூபா 853,226 நிலுவையும், 5 வருடத்திற்கும் 1 வருடத்திற்கும் இடையிலான காலப்பகுதிக்காக 488 சொத்துக்களுக்குரிய ரூபா 1,352,098 நிலுவை மீதியும் என உரிய பற்றுச்சீட்டுக்கள் முடிவுறுத்தப்படாமல் ரூபா 3,419 மீதியும் காணப்பட்டன. அவ்வாறே 152 சொத்துக்களுக்குரிய பற்றுச்சீட்டுக்கள் தீர்க்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற போதிலும் அச் சொத்துக்கள் 2 தொடக்கம் 7 வருடங்களுக்கிடையிலான காலப்பகுதியில் ஒன்றிணைந்த பெறுமதி ரூபா 853,671 ஆன நிலுவையொன்று காணப்பட்டது.

(இ) ஆதனவரிக் கட்டணத்தின் கீழ் வருடாந்தம் சாதாரணமாக ரூபா 18 மில்லியன் அளவில் ஆதனவரி நிலுவையை அறவீடு செய்வதற்காக 12 வட்டாரங்களின் கீழ் 3% தரகின் அடிப்படையில் 5 சபை ஊழியர்களும், 8% தொடக்கம் 12% இடைவெளியில் தரகின் அடிப்படையில் சேர்க்கப்பட்ட மூன்று ஊழியர்களினாலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவ்வாறு நிலுவை சேகரிப்பதற்காக வழங்கப்பட்ட பட்டியலில் மொத்த நிலுவை மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் காலாண்டு ரீதியான நிலுவை, நிலுவை காலப்பகுதி குறிப்பிடப்படாமை, ஒவ்வொரு நிலுவைப் பட்டியலின் அடிப்படையில் அறவிடப்பட்ட தொகைகளை தனித்தனியாக இனங்காண முடியாமை, பிடியாணைக் காலத்தின் இறுதியில் நிலுவைப்பட்டியலை மீளக் கையளிக்காமை, மேற்பார்வைக்கு உட்படுத்தப்படாமை, உரிய பற்றுச்சீட்டுப் புத்தகத்திற்காக இருபக்க காபன் பயன்படுத்தப்படாமை, சேகரிக்கப்பட்ட பணம் கட்டும் நாட்கள் 2 - 9 இடைப்பட்ட தாமதத்தைக் கொண்டிருந்தமை, தீர்மானிக்கப்பட்ட எந்தக் காலத்திலும் பணத்தை ஒரே தடவையில் கட்டாமை போன்ற குறைபாடுகள் காணப்பட்டன.

(ஈ) ஆதனவரி அலுவலகத்திற்குச் செலுத்துவதற்காக விநியோகிக்கப்பட்ட ஆதனவரிப் பற்றுச்சீட்டு விநியோகிக்கப்பட்ட தினத்திற்கு மாத்திரம் செல்லுபடியாக இருந்த போதிலும் பற்றுச்சீட்டில் அது தொடர்பாக குறிப்பிடப்படாத பற்றுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்ட தினத்திற்குப் பிந்திய தினங்களில் அந்தப் பற்றுச் சீட்டுக்களுக்கு செலுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை, அவ்வாறு செலுத்தாத பற்றுச்சீட்டுக்களுக்குரிய கணனிக் குறிப்புக்களை நிராகரிக்காத சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை, செலுத்தப்படாத பற்றுச்சீட்டுக்கள் தொடர்பான விபரப்பதிவேடு உரிய முறையில் பராமரிக்கப்படாமை, ஆதனவரிப் பிரிவில் தயாரிக்கப்பட்ட நாளாந்த பெறுவனவு அறிக்கை மற்றும் வங்கியினால் தயாரிக்கப்பட்ட பெறுவனவுப் பதிவேடு நாளாந்தம் மற்றும் கிரமமாக மேற்பார்வைக்கு உள்ளாக்கப்படாமை போன்ற குறைபாடுகள் காணப்பட்டன.

### 2.3.4 நீர்க்கட்டணம்

(அ) மீளாய்வாண்டின் நீர்க்கட்டணமாக ரூபா 78 மில்லியன் மாத்திரம் பற்றுச்சீட்டிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியின் போது நீர்க்கட்டணத்தின் நிலுவைப் பெறுமதி ரூபா 38,343,592 ஆக இருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) சபையினால் புத்தளம் வீதி மலசல கூடத்திற்காக மீளாய்வாண்டின் இறுதி வரை பற்றுச்சீட்டிடப்பட்ட ரூபா 2,169,641 தொகையான நிலுவை நீர்க்கட்டணமும், பஸ்

தரிப்பிடத்திற்கு அருகில் நிர்மாணங்களுக்கு நீர் வழங்குவதற்காக தனியார் கம்பனி பெற்றிருந்த நீருக்காக மீளாய்வாண்டின் இறுதிவரை பற்றுச்சீட்டிடப்பட்ட ரூபா 316,086 தொகையான நீர்க்கட்டணமும் முறையான பிரகாரம் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடப்படாத காரணத்தினால் அறவீடு செய்தல் பிரச்சினைகளுக்குரியதாக இருந்தது.

(இ) நீர் நுகர்வு இல. 5163 (குருணாகல் பொது வைத்தியசாலை) இற்குரிய வாசிப்பு மானியின் குறைபாடுகளின் காரணமாக 2007 யூன் தொடக்கம் 2008 யூன் வரையான காலத்தில் ரூபா 5,229,822 தொகையான நீர்க்கட்டணம் (பெறுமதி சேர் வரியுடன்) குறைவாகக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் இந்த நிலுவை மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வட்டார இலக்கம் 26 ''பீ'' இலுள்ள வியாபாரியின் கீழ் 408 நீர் நுகர்வோர்களுக்கு மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 14,154,775 தொகையான நிலுவை காணப்பட்டதுடன் 116 நீர் பாவனையாளர்கள் 3 மாதம் தொடக்கம் 1 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக சேர்ந்த நீர்க்கட்டணப் பட்டியல்களைத் தீர்த்திருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதியில் நீர் வழங்கல் துண்டிக்கப்பட்ட மொத்த நீர்ப்பாவனையாளர்களின் எண்ணிக்கை 63 ஆக இருந்ததுடன் அதில் 34 நுகர்வோர்களிடமிருந்து அறவிடவேண்டிய நிலுவை ரூபா 1,219,468 ஆக இருந்தது.

**2.3.5 வாடகை**

--------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நில வாடகை அறவீடு செய்யும் அடிப்படையில் சபையினால் விளையாட்டுச் சங்கத்திற்கு வழங்கப்பட்ட இந்த காணி மற்றும் கட்டிடத்திற்கு மீளாய்வாண்டின் இறுதியில் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்காக ரூபா 51,471 தொகை நிலுவை வாடகை காணப்பட்டதுடன் இந்த நிலுவைக்காக தாமதக் கட்டணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பஸ் நிலையத்தின் கடைத் தொகுதியில் மூன்றாவது மாடியில் அமைந்துள்ள சிற்றுாண்டிச்சாலையை வாடகைக்கு வழங்குவதற்கு சபையினால் 2005 ஆம் ஆண்டில் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் தனியார் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காக வியாபாரத் தொகுதிக்குரிய வாகனத்தரிப்பிடம் பயன்படுத்தப்படுமாயின் சபையினால் தீர்மானிக்கப்பட்ட வாடகை செலுத்தப்பட வேண்டிய போதிலும் 2005 ஆம் ஆண்டு தொடக்கம்

2008 மே வரை அவ்வாறான கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. 2008 மே தொடக்கம் பெறுமதி சேர் வரியும் சேர்த்து ரூபா 15,000 மாதாந்த நில வாடகை அறவிடப்பட்டிருந்த போதிலும் அதற்கான சபைத் தீர்மானமோ அல்லது உடன்படிக்கையோ காணப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் 19 தவணைகளில் ரூபா 285,000 நிலுவை மீதி காணப்பட்டது.

(இ) குருனாகல் மாநகர சபை அதிகாரப்பிரதேசத்தில் அமைந்துள்ள ரண்தலிய மற்றும் ரஜபிஹில்ல வாடிவீடுகள் 1980 செப்தெம்பர் 09 ஆந் திகதிய 105/3 ஆம் இலக்க அரசாங்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் சொந்தமாக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் ஊடாக சபையினால் அறவிடப்படும் முகாமைத்துவக் கட்டணம் 10% தொடக்கம் 30% வரை ஒரே தடவையில் அதிகரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே ரண்தலிய (புதிய) வாடிவீட்டுக்காக 1999 தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 1,086,111 தொகையான நிலுவை வாடகையும் ரஜபிஹில்ல (பழைய) வாடிவீட்டுக்காக ரூபா 916,650 தொகை நிலுவை வாடகையும் சபையினால் அறவிட வேண்டியிருந்தன.

### 2.3.6 களியாட்ட வரி

(அ) மாநகர சபைக்குரிய மாளிகாபிட்டிய விளையாட்டரங்கு சங்கீத அரங்கேற்றம் மற்றும் 9 நாடகங்களுக்காக மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய களியாட்ட வரித்தொகை அறவிடப்பட்டமையை இனங்காண முடியாதிருந்தது.

(ஆ) மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் 4 சினிமா அரங்குகள் காணப்பட்டதுடன் அந்த சினிமா அரங்குகளின் உரிமையாளர்களினால் அச்சிடப்பட்டு வழங்கப்படுகின்ற நுழைவுச் சீட்டுக்களில் களியாட்ட வரிக்கான முத்திரையிடல்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நுழைவுச் சீட்டுக்களுக்காக முத்திரையிடும் போது சினிமா அரங்குகளுக்கு 2 மாதம் 22 மாதம் போன்ற கால அளவிற்கான நுழைவுச் சீட்டுக்கள் ஒரே தடவையில் முத்திரையிடப்பட்ட 30 சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை.

(ii) 3 சினிமா அரங்குகளில் 2011 சனவரி – செப்தெம்பர் காலப்பகுதிக்குரியதாக வழங்கப்பட்ட நாளாந்த களியாட்ட வரி அறிக்கையின் பிரகாரம் 15 சந்தர்ப்பங்களில் சினிமா அரங்குகளினால் விநியோகிக்கப்பட்ட நுழைவுச் சீட்டுக்களில் 31,428 இற்கு முத்திரையிடப்பட்டமைக்காக சபையினால் நுழைவுச்சீட்டுக்களுக்கு முத்திரையிடும் பதிவேட்டின் பிரகாரம் உறுதிப்படுத்தப்படாமை.

(iii) நுழைவுச் சீட்டுக்களுக்கு முத்திரையிடும் போது தொடர் எண்ணிக்கையில் முத்திரையிடப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்ட காரணத்தினால் ஒரு சினிமா அரங்கில் பெட்டியின் கீழான 10,098 நுழைவுச் சீட்டுகளுக்கு முத்திரையிடப்பட்டமை உறுதிப்படுத்தப்படாமை.

### 2.3.7 வியாபாரக் கட்டிடத்தின் இணக்கச் சான்றிதழ் கட்டணம் அறவிடுதல்

நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் பகிரங்கப்படுத்தப்பட்ட 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் ஏதாவது நிர்மாணமொன்றுக்கு இணக்கச் சான்றிதழ் இன்றி பதிவு செய்தல், பயன்படுத்துதல் அல்லது உபயோகத்திற்கு எடுப்பதற்காக ஒரு தினத்திற்கு ரூபா 50 படி தாமதக் கட்டணம் அறவிடவேண்டிய போதிலும் மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் 2003 - 2010 காலப்பகுதியில் அவ்வாறு இணக்கச் சான்றிதழ் பெறப்படாத 21 கட்டிடங்களுக்காக அறவிட முடியுமாக இருந்த ரூபா 497,800 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2005 திசெம்பர் 19 ஆந் திகதிய 5(1) ஆம் இலக்க நகர சபை சம்மதத்தின் பிரகாரம் கட்டிட விண்ணப்பப் பத்திரம் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் இணக்கச் சான்றிதழ் பெறப்படும் வரை வருடாந்தம் ரூபா 200 கட்டணம் செலுத்தி கட்டிட விண்ணப் பத்திரத்தை புதுபிக்க வேண்டிய போதிலும் 138 வியாபார நிலையங்களில் அவ்வாறு தொடர்ந்து கட்டிட விண்ணப்பம் பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டிராததுடன் அவ்வாறு அனுமதிப்பத்திரம் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாயின் சபையினால் ரூபா 114,800 வருமானத்தை உழைக்கக்கூடியதாக இருந்திருக்கும். ‘‘இந்தப் பணத்தை முறையான பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக’’ மாநகர ஆணையாளர் 2012 ஆகஸ்ட் 06 ஆந் திகதி எனக்கு அறிக்கையிட்டிருந்தார்.

### 2.3.8 நானாவித வருமானம்

சபையினால் மேற்கொள்ளப்பட்ட நானாவித வருமான சேகரித்தல்களில் மீளாய்வாண்டின் யூன் வரையிலும் ரூபா 16 மில்லியன் அளவான டிக்கட்டுக்கள் வாகன பராமரிப்பாளர்கள் மற்றும் பஸ் நிலைய காசு சேகரிப்பாளர் 16 பேருக்கு விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் அடியிதழ்கள் விநியோகிக்கும் பதிவேட்டில் ஒவ்வொரு நபருக்கும் விநியோகிக்கப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை, மீளக் கையளித்தல், காசு கட்டுதல் தனித்தனியாக இனங்காண முடியுமான வகையில் காட்டப்படாமை, அவர்களின் காசு கட்டுதல் மற்றும் காசு அறவிடும் செயல்முன்னேற்றம் கிரமமாக ஏனைய உத்தியோகத்தரின் மேற்பார்வைக்கு உள்ளடக்கப்படாமை, காசு சேகரிப்பாளர்களினால் காசு கட்டும் நாட்கள் 2 இற்கும் 5 இற்கும் இடையிலான தாமதத்தில் மேற்கொள்ளப்பட்டமை போன்ற குறைபாடுகள் காணப்பட்டன.

### 2.4 மனிதவள முகாமைத்துவம்

தொழிலாளர், காவலாளி, சாரதி பதவிகளின் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 255 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் 236 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் இப்பதவிகளில் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அமைய, நாட்கூலி அடிப்படையின் கீழ் சபையினால் சம்பளம் வழங்கப்படுகின்ற 157 பெர் சேர்க்கப்பட்டிருந்தனர்.

### 2.5 ஒப்பந்த நிருவாகம்

சபையினால் மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 1,375,000 பெறுமதியின் அடிப்படையில் நேர்க்கூலி அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்த 17 வேலைகளுக்கு உள்ளூராட்சி ஆணையாளரின் (வடமேல்) 2007 யூன் 01 ஆந் திகதிய 2007/3 தொழில்நுட்ப ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் ஆலோசனையின் பிரகாரம் மூலப்பொருள் மதிப்பீடு, மூலப்பொருள் பெற்றுக்கொள்ளுதல், மூலப்பொருள் விநியோகித்தல், மீளக்கையளித்தல், செக்ரோல் அறிக்கை, வேலைப் பூர்த்தி அறிக்கை என்பவற்றை உள்ளடக்கிய கோவை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே தயாரிக்கப்பட்டிருந்த 14 வேலைகளின் கோவைகளில் தரஅறிக்கை, மூலப்பொருள் பகுப்பாய்வு / மூலப்பொருள் மதிப்பீடு, செக்ரோல் அறிக்கை, போக்குவரத்துச் செலவின பகுப்பாய்வு இறுதிப்பரிசோதனை / அளவிடை அறிக்கை என்பனவும் கோவையிடப்பட்டிருக்கவில்லை.

## 2.6 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 383,847 தொகையான அறவீடுகள் நிலுவையாக இருந்த பதவியணியினர் கடன் மீதியில் காணப்பட்ட ரூபா 254,318 தொகையான கடன் மீதி 2007 ஆம் ஆண்டில் மரணித்த உத்தியோகத்தர்களுக்குரியதாக இருந்ததுடன் சபையினால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த மீதி தீர்க்கப்பட்டிருக்கவில்லை. சேவையை விட்டுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களுக்குரிய ரூபா 95,120 தொகையான கடன் மீதி 2007 ஆம் ஆண்டிலிருந்து அறவிடமுடியாது காணப்பட்டது.

(ஆ) காணி மற்றும் கட்டிடப் பதிவேடு காணப்பட்ட போதிலும் அது நாளது வரையாகப் பேணப்பட்டிராததுடன் காலரீதியாக காணி மற்றும் கட்டிடங்களின் மெய்மையாய்வும் செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மீளாய்வாண்டின் காணி மற்றும் கட்டிடங்கள் தவிர பேரேட்டுக் கணக்குகளின் பிரகாரம் ரூபா 120,691,050 பெறுமதியான சொத்துக்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் அவைகள் மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் பிரகாரம் பெறுமானம் இடப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையில் சேவையற்றி ஓய்வூ பெற்றுச் சென்ற உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புப் பணம் செலுத்த வேண்டிய ஊழியர்களுக்கு சபையினால் அந்நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் 2011 மே வரை உரிய பிரகாரம் செலுத்தப்படாமையினால் அந்த நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 50,432,107 ஆக இருந்தது.

(இ) சபைக்குரிய 35 கி.மீ அளவான வடி காண் முறைமையும், மயான நிலமும், 2 சிறுவர் பூங்காக்களும் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் அதற்காகச் செய்யப்பட்ட பராமரிப்புச் செலவினங்களை தனித்தனியாக இனங்காண முடியாதிருந்தது.

(ஈ) சபைக்குரிய கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் போதியளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) ஒப்பந்த நிருவாகம்

(ஊ) கட்டிட விண்ணப்பப்படிவம் விநியோகித்தலும் இணக்கச் சான்றிதழ் விநியோகித்தலும்

(எ) வழங்கல் முகாமைத்துவம்

(ஏ) பதவியணியினர் முகாமைத்துவம்

(ஐ) வாகனப் பயன்பாடு